# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 22

[பதினேழு மற்றும் 22 வது அறிக்கையாக இணைந்து வருகின்றது]

பண்பாட்டுக் கழக வெளியீடு (உறுப்பினர்களுக்கு மட்டும்)

## ஞான சித்தர்
## மகான் பசும்பொன்னார் சிறப்புமலர்





ஞான சித்தர் பசும் பொன்
உ. முத்துராமலிங்கத் தேவர்

[ஞாலகுரு சித்தர் கருவூரார், இந்து மதத் தந்தை அவர்கள் அருளுலக ஒப்புதலின் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.]

வெளியிடு;- 26—10—85 காணிக்கை:- ரூ 1-00

# எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு..........!

கார்த்திகைத் தீபத்திருநாள் எதற்கு? கார்த்திகை என்பது ஆறு விண்மீன்களின் கூட்டம் அதாவது, கூடிவாழ வேண்டும், நட்பாக இருக்க வேண்டும், சகோதரத் தத்துவம் செயலாக வேண்டும் அப்பொழுதுதான் அகமும் புறமும் ஒளிமயமாகிடும். இது வடநாட்டவர் 'ராக்கிபந்தம் (ரக்ஷபந்தன்) என்ற திருநாளுக்கு மூலக்காரணமாகும். தென்னவர் மறந்தனர், வடவர் போற்றுகின்றனர்

தந்தை பெரியாரின் விருப்பப்படி இந்துமதத்தின் ஆட்சிமொழியான தமிழ் மொழியும் இந்து மதத்தின் அனைத்துக் கோயில்களிலும் தமிழர்களே பூசாறிகளாகவும் நிலைத்திடக் கூடிய திட்டத்தை செயலாக்கி வரும் 'ஞாலகுருசித்தர் கருவூரர்' அவர்களையோ, இ ம.இயக்கத்தையோ சந்திக்கவோ, சிந்திக்கவோ வரவேற்கவோ திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி தயாராக இல்லை ஏன்? எதற்காக? அதற்கு காரணம் எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு.........!

இன்றைக்கு நாட்டில் நடக்கின்ற கட்சிகளின் போராட்டங்களும், அரசின் கலக்கமிகு கவலைக்குரிய அவல கேவலங்கள் அனைத்துக்கும் காரணம் பேராசை பிடிக்க தலைவர்களுக்கிடையே உள்ள பதவிப் போட்டித்தான். இப் போராட்டங்களை தத்துவங்களுக்கிடையே நடைபெறும் போராட்டமாக மாற்றிட்டால்தான் அனைத்து தீயவற்றையும் ஒழிக்க முடியும் எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு.........!

காஞ்சி சங்கராச்சாரியாருக்கும், காலடி ஆதி சங்கராச்சாரியாருக்கும் தொடர்பே இல்லையென நீதிமன்றம் வரைபோன பிறமணர் எதிர்ப்பாளர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்கள் நாட்டில் உள்ள அனைத்து சங்கராச்சாரியார்களுமே காலடி ஆதி சங்கராச்சாரியார்களின் வாரிசுகளல்ல என்பதையும் ஆதிசங்கராச்சாரியார், சங்கராச்சாரியார் எல்லோருமே தமிழர்கள், என்பதையும் வரலாற்றுச் சான்றுகளோடும் இலக்கிய ஊன்றுகளோடும் விளக்கி வரும் ஞாலகுருவை வரவேற்கத் தயாராக இல்லாமல் இருப்பதற்கு காரணம் எங்களுக்குத் தெரியும் உங்களுக்கு.........!

அவ்வப்போது காங்கிரசுக்காரர்களில் சிலர் தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பணியையும்; சீர்திருத்தச் செயலையும்! மூடிமறைக்கும் வண்ணம் அறிக்கைகளை விடுத்து வருகின்றனர் தந்தை பெரியார் அவர்களால் தங்கள் வாழ்வில் ஏற்பட்டிட்ட மாற்றத்தை உணர்ந்த தாழ்த்தப்பட்டவர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களோ தமிழினமோ என்றும் மறவாது. ஆனால் ஒரு சிலர் மூடிமறைக்க முயலுவது ஏன் என்பது எங்களுக்குத் தெரியும் உங்களுக்கு.........!

இந்நாட்டில் உள்ள மடாதிபதிகள், ஆதினங்கள், பீடங்கள், அரசியலை விமர்ச்சிக்கவோ மக்களுக்குத் தலைமைத்தாங்கி வழி நடத்தவோ முன்வரவில்லை பகுத்தறிவு மன்றங்களும் கழகங்களும் உண்மையான தமிழின வளர்ச்சிக்கு உழைக்சப் பாடுபட விரும்பவில்லை நாட்டின் சிந்தனையைத் தூண்டிவிடும் ஆசிரியர் சமுதாயமோ,, அரசியலை, ஆட்சியியலை, சமுதாய தீமைகளை விமர்ச்சிக்க உரிமை இல்லை. மாணவர்களோ, இளைஞர்களோ சமுதாய மாற்றப் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது இந்தப்போக்கு வளர்க்கப்படுவதற்கு காரணம்உங்களுக்குதெரியுமா?

---

### வருந்துகின்றோம்

**அறிக்கை 20 இன் தொடர்ச்சி 23-வது அறிக்கையில் தொடரும் என மீண்டும் அறிவிப்பதற்கு வருந்துகின்றோம்.** — **ஆசிரியர் குழு**



# ஞான சித்தர்
# மகான் பசும் பொன்னர்
# உ. முத்துராமலிங்கத் தேவர்

**[78-வது பிறந்த நாள் விழாவில் குவலய குருகுல பீடம் இந்துமதத் தந்தை 'ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களின் அருளுலக அறிவிப்பு]**

*இம்மாஞாலத்தின் அருளுலகக் கருவறையாக. தொட்டிலாக, பிறப்பிடமாக தாயாக என்றென்றும் விளங்கிடும் தமிழகத்தில் தோன்றிட்ட அருளாளர்களில் ஒருவரே பசும்பொன்* **உ. முத்துராமலிங்கத்தேவர்** *அவர்கள்.*

*இவர். உலகியலாக மக்களுக்கிடையில் வாழ்ந்திட்ட காரணத்தால்; மக்கள் இவரை அரசியல் தலைவராக, சமுதாயத் தலைவராக, சமயத் தலைவராக, சிறந்த இலக்கிய மேதையாக, சொற்பொழிவுக் கலைஞராக, தத்துவ வித்தகராக, ........உணர்ந்தார்கள் ஆனல். இவர், பல்வேறு நிலைப்பட்ட பத்தியாளர்கள், சத்தியாளர்கள். சித்தியாளர்கள் முத்தியாளர்கள். தவசியாளர்கள் ஞானிக , மகான்கள், சாதுக்கள். முனிவர்கள், இருடிகள்...... ...முதலியோரிடம் நெருகக மான தொடர்பு கொண்டு தன்னை ஒரு சித்தராக வளர்த்திடும் அனைத்துப்பயிற்சி -களையும் முயற்சிகளையும் செய்திட்டார். இவரது தொடர் முயற்சிகள் வெற்றியாயின.*

*பதினெண் சித்தர்கள், அண்ட பேரண்ட அருளாட்சிப்படி இம் மண்ணுலகின்மையமான இளமுறியாக் கண்டத்தில் 43, 73 086 ஆண்டுகளுக்கு முன்னல் தங்களின் தாய் மொழியான அமுதத் தமிழில் 'மணிசர்களை' மனிதராக்க இந்து மதத்தைத் தோற்றுவித்தார்கள். இம் மதத்தின் தலைமைப்பணியாளர் களாகத் தேவைக் கேற்ப 48 பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடும் திட்டத்தை வகுத்தார்கள்: எண்ணற்ற வாக்குகள். வாக்கியங்கள், வாசகங்கள், பாரம்பரியங்கள், விதிகள், மறைகள் முறைகள். நெறிகள், வேதங்கள் சித்தங் கள், நாதங்கள், போதங்கள்...வகுத்தார்கள். தோன்றிடக்கூடிய அருளாளர்களுக்கு இலக்கண இலக்கியங்கள் வகுத்து மூலஆச்சாரியார்கள் கருவழி ஆச்சாரியார்கள் குருவழி ஆச்சாரியார்கள். பதினெண் சித்தர் பீடவழி ஆச்சாரியார்கள் 48 வகை சித்தர்கள், 48 வகை வழிபடு நிலையினர்கள. 48 வகை வழிபடு நிலையங்கள், 48 வகை அருட்பட்டத்தார்கள், 48 வகை அருளாளர்கள். அருளாளிகள்,*

அருளாடு நாயகங்கள், 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 48 தீர்த்தங்கரர்கள் 48 புத்தர்கள், 48 தேவ குமாரர்கள், 48 தேவதூதர்கள் (நபிகள்), எண்ணற்ற நாயனார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள், சித்து விளையாடல்காரர்கள், குருக்கள்கள், பூசாறிகள்..... என்று அருளுலகில் தெளிவான, முறையான, நிறையான, ......... வடிவமைப்புக்களையும், வாழ்வியல்களையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புகளையும் உருவாக்கினார்கள்.

இம் மாபெரும் செயல் சித் தாந்தங்களும், தத்துவ அடிப்படைகளும், இலை மறை காயாக வாழும் சித்தகணங்களால் சித்தாதிகளால், சித்த வித்துக்களால், .........காப்பாற்றப்பட்டே வருகின்றன. **அருள்மிகு, தவத்திரு, மகான் பசும் பொன்னார், உ. முத்துராமலிங்கத்தேவர்** அவர்கள் உலகியல் கடந்து பல்வேறு நிலைகளில் தேர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்து: பிறருக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் **அருள் வள்ளலாக** உயர்ந்தார். இந்துமத அருளாளர் இலக்கண இலக்கியப்படி அவருடைய சமாதுக்குச் சித்த கணங்களும், சித்தாதிகளும் சித்த வித்துக்களும் அருளுறு நிலைகளைப் போற்றிப் பேணிக்காத்தார்கள். பூசா விதிப்படி 18 முதல் 27 ஆண்டுகளில் சமாதுநிலைகள் முதிர்ச்சியடையும் என்பதால்: இன்றைய ஞானாச்சாரியார், குருதேவர், அரசயோகி, அண்ட பேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம் இராசிவட்ட நிறையுடையார், ஆத்தாள் அமளிகை, சொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், 'ஞாலகுரு சித்தர் கருவூரார், இந்துமதத் தந்தை' பசும்பொன் சென்று அனைத்து வகையான ஐந்திறங்கள், ஐந்திரங்கள், ஐந்தரங்கள், ஐந்தீ வேட்டல்கள், முத்தீ ஓம்பல்கள் 'நேம, நியம, நிடத, நிட்டைகள்'; சுருதி' ஆரண, ஆகம மீமாம்சைகள், ''அத்திற சாத்திற, சூத்திற; தோத்திற நேத்திறங்கள் .........முதலியவைகளால் குருபூசை நிகழ்த்தினார் இவற்றினடிப்படை -யிலேயே 'அருள் வள்ளல் உ. முத்துராமலிங்கத் தேவர் பற்றிய அருள் நிலைகள் 'ஞானசித்தர்'' 'மகான் பசும் பொன்னார்' என்று அறிவிக்கப்படுகின்றன.

இந்த அருளுலக அறிவிப்பின்படி அவருடைய சமாது நிலை முப்பத்திரண்டாவது ஆண்டிலிருந்து [1994 முதல்] அருளை மக்களுக்கு வழங்க ஆரம்பித்திடும் இதன் முதிர்ச்சியாகப் பதினாறு ஆண்டுகள் வளவளர்ச்சியும், அருட்செழிச்சியும் வலிவடைந்து நாற்பத் தெட்டாவது ஆண்டில் இச்சமாது 'ஓர் ஆலயமாக*' [*நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு நிலையங்களில் ஒன்று...... அமளிகை, அம்பலம், அரங்கம், ஆலயம், கந்தழி கோயில் கோட்டம், சபை, தானம்; திராவிடம், திருப்பதி, நியமம், பள்ளி, பாழி கொட்டடி, வேசரம்.........என்று 48 வகைகள் உள்ளன] உருவாகிடும். எனவே, 'பசும் பொன்னார் ஆலயம்' என்று இப்போதிருந்தே ஞான சித்தர் உ. முத்துராமலிங்கத் தேவரின் சமாது அமைக்கப்படல் வேண்டும். அவர் பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றுள்ளார்; அதனால், இனிமேல் அவருக்குச் சிலை உலோகத்திலும் கருங்கல்லிலும் தான் செய்ய வேண்டும் ஏற்கனவே உள்ள அனைத்துச் சிலைகளுக்கும் ஏந்தரீகச் சக்கரம்; மாந்தரீகச் சக்கரம், தாந்தரீகச் சக்கரம்.........முதலியவற்றை முறைப்படி ஆராய்ந்து வைத்திடல் வேண்டும். பூசாவிதிப்படி அனைத்துச்சிலைகளும் பூசை செய்ய வேண்டும்

கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள் ஒப்புதல் பெற்ற அறிவிப்பு—

—**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

---

**நினைவு கூறுகின்றோம்!**

**விரைவில் இவ்வாண்டு [1985] முடிய இருப்பதால், அடுத்த ஆண்டு 1986 ஆம் ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை ரூ 15/ (பதினைந்து ரூபாய் மட்டும்) உடனடியாக அனுப்ப வேண்டுகின்றோம். புதுப்பிப்போருக்கு 'குருதேவரின்' புகைப்படம் அனுப்பப்படும்.**

—**ஆசிரியர் குழு**

# சூரிய காயந்திரி மந்தரம்

**(ஆயிரம் ஆண்டுகட்கு பின்னர் ஞாலகுரு சித்தர் கருஊரரால் வெளியிடப்படுகின்றது)**

**சுர்ரெனும் சூரியே விசிகடரே ஆரியா**
**பாசக்கரையா ஆன்ம வித்தே மகேசா**
**மகிழ் விதிக்கு அரையா தீயே நீயாகி**
**தன்னோடுவரு ஆதியந்தப் பிறச்சினை யற்றிடு**
**நாமாகுக சுவையாகுக பயனாகுக காத்திடுக**

*அன்றாடம் ஆதவன் உதிக்கும்போது இதனைக் கூறிப் பூசைகளைச் செய்யுமாறு இக்குலத் தவரான காகபுசுண்டர் (காக்கையர்) கூறுகிறார்*

*பகற்காலத்துச் செய்யும் பூசைகளில் சூரியனைத் துணைக்கழைத்திட இந்தச் சூரிய காயந்திரி மந்தரம் தான் இந்து மதத்துக்கெனப் பதினெண் சித்தர்களாலும் பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் வழங்கப்பட்டது,*

*வட ஆரிய வேதமதப் பிருமணர்கள் தமிழர்களை ஏமாற்றுவதற்காக இதன் சுருக்கம் என்று ஒரு சமசுக்கிருதத் சூரிய காயத்ரி மந்திரத்தைச் சூரிய வழிபாட்டிற்கு உண்டாக்கினார்கள் அது*

**பாஸ்கராய வித்மஹே**
**மஹாத்விதி கராய தீமஹி**
**தன்னோ ஆதித்ய ப்ரச்சோதயாத்"**

*இந்தச் சூரிய காயந்திரி மந்தரம் தவறானது, பயனற்றது இந்தத் தவறான மந்திரத்தால் பதினெண் சித்தர்கள் படைத்த சரியான பயன்மிக்க மெய்யான மந்தரம் செயலிழந்தது*

*தமிழர்களை, அருளாற்றல் அற்றவர்களாக ஆக்கிடுவதற்காகப் பிறமண்ணினரான பிருமணர்கள் சூழ்ச்சியாசப் போலியான, பயனற்ற மந்திரங்களை உண்டாக்கிட்டார்கள். இச் சூழ்ச்சிகளை, பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் எடுத்துக் கூறியும் தமிழர்கள் திருந்தவில்லை தொடர்ந்து அவர்கள் பிருமண அடிமைகளாக கருத்துக் குருடர்களாக இருக்கின்றார்கள்*

*இவற்றால் தான் 'மெய்யான இந்து மதம்' காக்கும் பணிக்காக 'இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது பிருமணர்களையும், சமசுகிருத மொழியையும் எதிர்த்துத் தான் தமிழர் -களையும், தமிழ் மொழியையும், இந்து மதத்தையும் காப்பாற்ற வேண்டும்*

*பிருமணர்களும் திருந்தித் தமிழில் உள்ள சூரிய காயந்திரி மந்திரம். மந்திறம், 'மந்தரம்' மாந்தரம், மாந்தரீகம், எனும் ஐந்தினையும் பயன்படுத்தி உய்வடைய வேண்டு மென்பதே இ. ம. இ. யின் கொள்கை. இந்த இயக்கம் கண்மூடித்தனமாக பிருமண வெறுப்பையோ! சமசுகிருத மறுப்பையோ வளர்க்கவில்லை. இனியும்' தமிழ் மொழியில் உள்ள அரிய, சீரிய, பெரிய. நேரிய......... அருளுறு பூசா மொழி வாசகங்களையும். வாக்கியங்களையும்; வாக்குகளையும் உலக மக்கள் பயன் படுத்தி உய்வடைவதைப் 'பிருமணரின் பொய்யான வரிந்து மதம்' தடுப்பதை அனுமதிக்க முடியாது கூடாது தமிழினமே நீ விழிச்சி பெறு! எழிச்சி பெறு!! கிளர்ச்சி செய்!!! வளவளர்ச்சி முயற்சியில் ஈடுபடு!!! மலர்ச்சி மிகு செழிச்சியை உருவாக்கிடு! உருவாக்கிடு! உருவாக்கிடு!*

*இவற்றை உணர்ந்து தமிழினம் பிருமண அடிமையாகாமல்: ''தமிழ் மொழிச் செழிச்சியே இந்து மதச் செழிச்சி''! ''தமிழின எழுச்சியே இந்து மத எழிச்சி''! ''தமிழக எழிச்சியே இந்து மத எழிச்சி''! 'தமிழுணர்வு விழிச்சியே இந்து மத விழிச்சி'' தமிழ்ச் சமுதாய ஒற்றுமைச் செழிச்சியே இந்துமதச் செழிச்சி''! ''தமிழின நாகரிக விடுதலை மலர்ச்சியே இந்துமத ஆன்ம நேய ஒருமைப்பாட்டுத தத்துவ மலர்ச்சி''... என்ற உண்மைகளை உணர்ந்து,துணிந்து பிருமணரின் பொய்யான ஹிந்துமதத்தைக் கண்டித்துத் திருத்தவேண்டும்! திருத்திட முன்வரவேண்டும்*

*பொய்யான ஹிந்து மதத்தை விமர்சித்துத்தான் மெய்யான இந்து மதத்தை காப்பாற்ற வேண்டும். உலகெங்கும் தமிழர் இழிவை, நலிவை, அழிவைப் பெறுவதைத் தடுக்க வேண்டுமானால், தமிழினம் மெய்யான இந்துமதத்தின் மூலம் ஒற்றுமையும் கட்டுக்காப்பும் பற்றும், பாசமும்...... மிகுந்த புதிய சமூதாய நிலையைப் பெற்றேயாகவேண்டும. இதற்கு இ. ம இ. தான் வழி! வழித்துணை. வழிகாட்டி*

*[கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ இராமசாமி பிள்ளை எழுதியவையிலிருந்து .... . ]*

## சூரிய காயந்திரி மந்திரம்

**தத்துவ வித்தே சூரியே சத்தாகிச் சித்தாகிச் சிவமாகிடுக!**
**எத்திசையாரும் பத்தியால் முத்தியுறத் தழைத்து எழுநீ!**
**காத்திடுக! சுவையாகிடுக! நலமாகிடுக! நாமே யாகிடுக!**
**அத்தனையையும் விழிச்சியாக்கிடுக எழிச்சியாக்கிடுக! செழிச்சியாக்கிடுக!**
**ஆஉள ஓம்! ஆஉள ஓம்! ஆஉள ஓம்! ஆஉள ஓம்! ஆஉள ஓம்!**

*இதுவே சித்தர் காகபுசுண்டர் ஓதிய சூரிய காயந்திரி மந்திரம்.*

## குருபாரம்பரியம்

*[குருவாக்கு, குருவாக்கியம் குருவாசகம், இதனையே கூறுகின்றன]*

*''இந்து மதத்தை விளக்கிக் கொள்ளும் விதத்தைப் பொறுத்துத்தான்; அவர் தரும் விளக்கங்களும், பயிற்சி முயற்சிகளும், தேர்ச்சி முதிர்ச்சிகளும் பிற செயல்களும் அமையும் எனவே, பதினெண் சித்தர்களின் போதனைகளையும், சாதனைகளையும் புரிய முற்படுக! அதுவே இந்து மறுமலர்ச்சி இயக்கம்!!*

**—சித்தர் ஏனம் பட்டியார்**

---

**சத்தி காயந்திரி மந்தரம்**

**ஓம் பூர்வ புலன்கள் குவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணாகுக**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீமகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதியாகும்**

(ஏற்கனவே வெளியிடப்பட்டது)

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்-4

வள்ளல் பெருமானார், தமது வாழ்நாளிலேயே அருளுலக வாரிசுகளை உருவாக்கிட வேண்டுமென்றப் பேரார்வத்தால் ஆயிரக்கணக்கில் அருட்பாக்களை எழுதினார். வெறும் மந்திர மாயங்களையும், அற்புதங்களையும், விளைவித்து ஒரு கண்மூடித்தனமான கூட்டத்தைத்தன பின்னால் திரட்டாமல் புராண, இதிகாச சொற்பொழிவுகளையும், இலக்கிய விரிவுரைகளையும, அருளுரைகளையும் அறிவுரைகளை-யும், நாடெங்கும் வழங்கினார். பல அருளாளர்களையும், நேரில் சென்றுக் கண்டு, அவர்களெல்லாம் தழைத்து, செழித்து வளர்ந்திட அருளெனும் நீரை மழையாகப் பொழிந்தார் அதாவது, நாடெங்கும் அருட்பயிருக்கு வேலி கட்டுவது போல் தமிழ் மொழியின் மேன்மை, தொன்மை, வண்மை, நுண்மை, திண்மை, உண்மை, பான்மை, பயன் இலக்கியவளம, இலக்கிய வரலாறு, இலக்கியக் கலைஞர்களின் வரலாறு, சித்தர்கள் வரலாறு, பூசாவிதிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தியாளர்கள் வரலாறுகள், அரசர்களில், அருளுள்ளம் கொண்டோர்களின் வரலாறுகள், அருளாளர்களில் அரசநிலை பெற்றோர்களின் வரலாறுகள், அருளுலக முதன்மை பெற்ற வழிபாட்டு நிலையங்களின் வரலாறுகள் முதலியவைகளையெல்லாம் எளிய உரைநடையில் உரையாடல்களின் மூலம் வழங்கினார் சொற்பொழிவுகளின் மூலம் வழங்கினார். இவற்றைக் கேட்க மக்கள் வடலூரிலும், சிதம்பரத்திலும், காஞ்சியி-லும, சென்னையின் பல பகுதிகளிலும் நிறைய கூடினார்கள். இவரை, அருளாளராக பேரறிஞராக, ஆச்சாரியாக, குருபீடமாக, இறைவனின் [திரு அவதாரமாக] திருத்தோன்றலாக, இறைவனாக.........நினைத்து மக்கள் கூட்டம், இவரின் ஆதரவாளர்களாக, அடியார்களாகத் திரிந்தார்கள் இவர் ஒரு தமிழர் என்பதால் தமிழினப் பகைவர்கள், தமிழின எதிரிகள், தமிழின விரோதிகள் இவருக்கு மறுப்பாக செயல்பட்டார்கள். ஆனால், அவர்களின் தவறான சொல்லும் செயலும், கடலில் கரைந்த பெருங்காயம ஆயிற்று. எனவே, கும்பகோணத்து சங்கரர் மடத்து மடாதிபதியின் தலைமையில் எதிரப்பணி உருவாயிற்று. சிருங்கேரிபீடத்து சங்கராச்சாரியாரும், பூரிமடத்து சங்கராச்சாரியாரும், பக்கபலமாகத் துணைப்படைத் தளபதிகளானார்கள் அறியாமைக்கும், அருளுக்கும்' போர் மூண்டது. கடலூர் கெடிலம் ஆற்றங்கரையில் சிலை வணக்கம் [உருவ வழிபாடு] தேவையா? இல்லையா? என்ற கருத்தை மையமாகக் கொண்டு போரிட சங்கராச்சாரியார்கள் நாள் குறித்தார்கள் ஆனால் அருளே வடிவான வள்ளல் பெருமான் அமைதியாக அருட்போரை நிகழ்த்திட ஆரவாரம் ஏதுமின்றி ஆள் பலமின்றி, தனித்து கடலூர் கெடிலம் ஆற்றங்கரைக்கு புறப்பட்டார். போருக்குரிய நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பே, திருப்பாதிரிப் புலியூர் அலையவனாகத்தில் வந்து தங்கினார். சங்கராச்சாரியார்-களின் போர்க்கோலம் பற்றியச் செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவிற்று. மக்கள் வெள்ளம், வள்ளல் பெருமானுக்கு ஆதரவாகத் திரண்டது தென்னாற்காடுமாவட்ட, ஆட்சித்தலைவராக இருந்த ஆங்கிலேயரும், மாவட்ட காவல் துறையும் எதிர்பார்த்துப் பெரிய பாதுகாப்புகளுக்கு ஏற்பாடுகள் செய்தார். இந்த அருட்போர் தமிழினத்துக்கும் பிருமணர்களுக்கும் நடக்கக் கூடிய இனப்போராக அல்லது சாதிப்போராக மாறிவிடக் கூடாது என்று அஞ்சிய சங்கராச்சாரியார்கள் பின் வாங்கினார்கள். அவர்கள் போருக்கே வரவில்லை. சூழ்ச்சியாக வள்ளல் பெருமானை ஒழிக்கத் திட்டமிட்டார்கள். ஆனால், நிழலே விழாத அளவிற்த அருவுருவ அழியாத, அமுத தேகம் பெற்றிட்ட, வள்ளல் பெருமானை யாவரும் எதுவும் செய்ய முடியவில்லை சில நாட்கள் திருப்பாதிரிப் புலியூரில் தங்கிவிட்டு பிறகே வடலூர் திரும்பினார், ஞானசித்தர் இராமலிங்க அடி-களார் தொடர்ந்து, பல மாதங்கள், தமிழகம் எங்கிருந்தும் கெடிலம் ஆற்றங்கரையில் நிகழ் இருந்த அருட்போர் பற்றிய செய்தித் தொடர்பாக, பத்தர்களும், விருப்பாளர்களும் ஆதரவாளர்களும், வடலூர் நோக்கி வந்து கொண்டே இருந்தார்கள். இருந்தாலும், ஐயா, அவர்களின் மனம் அமைதிபெறவில்லை. ஐயாவை புரிந்து கொள்பவர்களே, ஐயாவிடமிருந்து அருளுலகப் பேருண்மைகளைப் பயிற்சியாக பெற

[தொடர்ச்சி 10 ஆம் பக்கம் பார்க்க]



# இந்தியாவில் மார்க்சீயம்-4

இதே ஆண்டில் அக்டோபர் இறுதி முதல் நவம்பர் வரை எங்கல்சு 'கம்யூனிசிட் லீகின' பாரிசு மாவட்டக் கமிட்டியின் ஆணைப்படி 'கம்யூனிசத்தின் கோட்பாடுகள்' என்ற தலைப்பில்-'லீகின் வேலைத் திட்டம்' ஒன்றைத் தயாரித்தார் இப்படிப் போட்டிப் போட்டுக் கொண்டு சளைக்காமல், சளைக்காமல் உழைத்ததன் பயனாக 1847 இல நவம்பர் 29 முதல் டிசம்பர் 8 முடிய இலண்டனில் கம்யூனிசிட் லீகின இரண்டாவது மாநாடு கூடியது இதில் இவர்களிருவருமே நேரில் சென்று கலந்து கொண்டு தங்களுடைய சிந்தனைகளை விளக்கினர். அம்மாநாடு இவ் இருவரையும் முழுமையாகப் புரிந்து, நம்பி ஏற்றுக் கொண்டது. அதன் பயனாக, இவர்-கள் இருவரிடமும் 'லீகின்' முழுமையான வேலைத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

பிரான்சில் 1848 இல் நடைபெற்ற பிப்ரவரிப் புரட்சியினால் உந்தப்பட்ட செர்மானிய அகதிகள் கம்யூனிசுடுகள், மற்றும் சனநாயகவாதிகள் யாவரும் ஒன்று சேர்ந்து பிரசெல்சில் ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். இதையுணர்ந்த கார்ல் மார்க்சு தன்னிடமிருந்த பெரும் பகுதிச் சொத்தை வழங்கினார். கடுமையான வறுமை தமது குடும்பத்தையே கொடுமையாகத் தாக்கி-தகர்த்துக் கொண்டிருந்த போதிலும மார்க்சும, சென்னி மார்க்சும் இம்மி அளவும் தயக்கமின்றி அச்சமின்றி புரட்சிக் காரர்களுக்கு உதவமுன் வந்தனர்.

இவ்வாறு இவர் ஈடுபட்டிருந்ததைத் தெரிந்து கொண்ட பெல்சிய அரசு 2-மணி நேரத்திற்குள் வெளியேற உத்திரவிட்டது அவரின் மனைவி வேண்டுகோள் விடுத்தும் ஏற்கப்படாததால்; மேலும் காலமும் குறுகிவிட்டதால் அனைத்துப் பொருட்களையும் அப்படியே விட்டு விட்டு மார்ச்சு 5 இல் (1848) புறப்பட்டனர் இவரைத் தொடர்ந்து மார்ச் 21 இல் எங்கல்சும் பாரிசுக்கு வந்தனர். இருவரும் அயராமல் இணைந்து செர்மன் 'கம்யூனிசிட் கட்சியின்' "கோரிக்கை தயாரித்துத் துண்டுபிரசுரம் ஒன்றை மார்ச்சு 29 இல் வெளியிட்டனர் இதையொட்டி மற்ற பகுதியில் புரட்சி பரவும் அபாயம் கருதி ஒவ்வொரு அரசும் முன்னறிந்து நடவடிக்கை எடுத்தன் பயனாகவும், புரட்சிக்காரர்களின் ஆழமற்ற, தெளிவற்ற எதிர்காலச் சிந்தனையற்ற நிலையினாலும் தொடர்ந்து புரட்சிப் போராட்டங்கள் தோல்வி கண்டன புரட்சியாளர்கள் வெறும் ஆரவாரத்தில் ஈடுபட்டு எதிர் காலத்தை மறந்து கொண்டிருப்பதை 'கார்ல் மார்க்சு' பலமாக எதிர்த்து உரக்கக் கூவினார். ஆனால் அவரின் கருத்துக்களை பிரான்சு மக்களின் மகிழ்ச்சி யொலியில் அப்படியே அமுங்கிப் போயின இதன் பயன், தொடர்ந்து தோல்வி கண்டது புரட்சிப்படை

1848-ஆம் ஆண்டு சூனில் கோலோன், குடியரசுச் சங்கத்திலும் கோலோன் தொழிலாளர் சங்கத்திலும், விரிவான நடைமுறைப் புரட்சிப் பணிகளை மார்க்சும் எங்கல்சும் நேரிலே சென்று மேற்கொண்டார்கள். மேலும் அங்கிருந்து புறப்பட்டு பெல்ஜியம், பாரிசு, சுவிட்சர்லாந்து பெர்ன் நகர்...........சென்று கோலோன் திரும்பினர். ஆனாலும் இடைவிடாது 'புதிய ரைன்லாந்து கெசட்' டிற்கு கட்டுரைகள் எழுதிய வண்ணம் இருந்தனர். திரும்பி வந்த மார்க்சையும் எங்கல்சையும் காவலர்கள் 1849-ஆம் ஆண்டு பிப்ரவரியில் புரட்சிக்குத் தூண்டியதாகக் கைது செய்து கோலோன் நகரிலிருந்து வெளியேற்றினர். தொடர்ந்து இவர்கள் தங்கள் சார்பில் தாங்களே வாதாடிய போதும்; இவர்களின் கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

தொடரும்

# அருட்கேணி நீர் குவளைகள்...!

### தமிழின மறுமலர்ச்சிப் போர்-4

நான் பன்னிரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாக அருளாட்சிப் பொறுப்பேற்றுப் பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும் முடித்துக் கூட என்னை இன்றும் வெளிப்படுத்திக் கொண்டு நேரடிப் பொது வாழ்வில் ஈடுபட்டிடாமல் வெறும்எழுத்துப்பணியை மட்டுமே மேற்கொண்டிருப்பதற்கு பல சீரிய காரணங்கள் உண்டு. குறிப்பாக தந்தை பெரியார் ஊட்டிய 'சுயமரியாதை உணர்வு; தமிழினப்பற்றுணர்வு; 'தமிழ்மொழி ஈடுபாட்டுணர்வு' பகுத்தறிவுப்போக்கு, 'சீர்திருத்தநோக்கு' 'விடுதலையுணர்வு' 'அரசியல் எழுச்சி'... முதலியவை நாடுதழுவி சில இயக்கங்களையும் (Movements and Parties), பல தனித்தலைவர்களையும் (Slalis-men, Individual Leadership, Grators... and etc) உருவாக்கியிருக்கின்றன. இவற்றால்,* தமிழர் நலம் பேணும் முயற்சியெனும் நெருப்பு அணைந்திடாமல் அவ்வப்போது சில சமயங்கள் கொழுந்து விட்டெரிந்தும், பெரும்பாலும்புகைந்து கனிந்துகொண்டும் உள்ளன...... இக்காரணங்களால்தான் உலகெங்குமுள்ள தமிழர்களும் ஆர்வம்பெற்று பங்கு பெற்றிடக்கூடிய ஒருமாபெரும் இயக்க அமைப்புக்காக அமைதியாகவும், பொறுமையாகவும் செயல்பட்டு வருகின்றேன்.

நண்ப! தமிழரின் விழுச்சியையும், எழுச்சியையும் பலர் சுய நலத்துக்காகப் பலியிட்டும்; விலைக்கு விற்றும, ஒத்தி வைக்கும். வாடகைக்குக் கொடுத்தும் பாழாக்கி வீணாக்கி வருகின்றனர். இவற்றால், நாம் உடனடியாக செயல் பட்டேயாக வேண்டுமென்ற இக்கட்டான இன்றியமையா நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தான் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என்று முடிவெடுத்து ஆயிரக்கணக்கில அச்சேராமலிருக்கும் பழம்பெரும் நூல்களை அச்சிடவும் புதிய சிந்தனைகளையும், எண்ணங்களையும், உணர்வுகளையும்........ தெளிவான கொள்கைகளாக, குறிக்கோள்களாக விளக்கிடும் எனது ஆயிரமாயிரம் அஞ்சல்களிலும், கட்டுரைகளிலும் சிலவற்றை நூல் வடிவில் வெளியிட சில நணபர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளேன்.

நண்ப! பெரியார் ஈ. வெ. ரா. 'பொருளாதாரச்சிந்தனை' (Economical Thinking) இல்லாமல் இத்திருநாட்டுச் சீர்திருத்தப்பணிகளை ஆற்றியது ஒரு பெரிய குறைதான் அவரால், 'பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அவசியத்தை'' ( The Revolution of the-working class ) உணர முடியாமல் போய்விட்டது என்று கூற மாட்டேன் நான்; ஆனால் தானுணர்ந்ததை பிறர்க்கு உணர்த்தத் தவறி விட்டார் என்று துணிந்து கூறுவேன் நான் இத்துடன் அவர், அறியாமையையும், மடமையையும், மதத்தின் பெயரால் நிகழும் சுரண்டலையும் மட்டும் தான் கண்டித்தாரே தவிர; இத்திரு நாட்டில் முதலாளித்துவச் சுரண்டலையும், ஏழை எளிய பாட்டாளிகளின் வறுமைத்துயர்களையும் ( The Sufferings of Poverty and Starvation ) நடுத்தர வர்க்கத்தின் அலுவல வாழ்வில் வளரும் அடிமைப்புத்தியையும் (The Slavery attitude ofthe MiddleClass Who are the Office Goings, The Selfish and Slavery Mentality of the Offiie Going people)... நேரடியாகத் தாக்கி விமர்சித்துப் புரட்சிக்கு வித்திடத் தவறி விட்டார் பெரியார் ஈ.வெ.ரா. என்ற குறையை,கறையை... யாராலும் மூடிமறைக்க முடியாது. அதனால்தான் இவர் 'தனிநபர் வாழ்வு'' ''சமுதாய வாழ்வு'' ''அரசியல் வாழ்வு''... ஆகிய மூன்று நிலையிலும் பல கருத்துப்புரட்சியைச்செய்தும்கூட வரலாற்றுச் சிறப்புமிக்க எந்தநிலையையும்தனக்கு தேடிக்கொள்ள முடியாதவராகி விட்டார் இதே நேரத்தில் சித்தர்கள் எவ்வளவு தான் புற இனத்தார்களாலும் புறச்சமயத்தார்களாலும் தாக்குண்டு தகர்த்து மூடி மறைக்கப்பட்டாலும்; அனைத்தையும் வென்று நிலையான வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது.

நினைத்துப் பார்த்ததற்குரியது. சித்தர்கள் 'பொருள் முதல் வாதச் சிந்தனை யையும் புரட்சி கரமற்றச் செயல் திட்டம்' பகுத்தறிவு அணுகு முறை 'விஞ்ஞானக் கண்ணோட்டம்'.........முதலிய -யவற்றை உடையவர்கள். ஆனால், நாட்டில் பொதுவாகச் 'சித்தர் நெறி வறட்டு வேதாந்திரிகளை -யும், தோல்வி மனமுடைய தத்துவ ஞானிகளையுமே உருவாக்கும் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது ஆனால். இது ஒரு தவறான குற்றச்சாட்டாகும். சித்தர் நெறித் தத்துவம் பல அகத்தி யர்களை, பல ஔவையார்களை பல கபிலர்களை, பல கல்லாடர்களை, பல பட்டினத்தார்களை, பல நக்கீரர்களை, பல் தாயுமானவர்களை பல ஞான வள்ளல்களை.........உருவாக்கி வந்திருக்கின்றது உலகத்தழுவிய மொழித் துறையிலும். சமயத்துறையிலும், மருத்துவத்துறையிலும். அரசியல் துறையிலும் .........பல பொதுமைப் பேருண்மைகளை என்றெடுத்த பெருமை சித்தர் நெறிக்கே -யுண்டு இவற்றை உலகம் உணரவில்லையென்று வருந்துவதை விடத் தமிழர்களே இன்றும் உணராமல இருக்கின்றார்களே என்று வருந்துவதுதான் முறையானது. தேவையானது

நண்ப! நம் தமிழின விடுதலைப் போருக்கும். உரிமைப்போருக்கும். கன்மானப் போருக்கும். தனித்தன்மை நிலை நாட்டும் பெருமைப் போருக்கும் மொழிகாக்கும் போருக்கும். சமயம் காக்கும் போருககும்,சமுதாயம் காக்கும்போருக்கும்... .முடிவுகாணவேண்டியவர்கள் என்ற பொறுப்போடு செயல்படுவோமாக. நம் காலத்தவர்களின் நம்பிக்கை மிக்க நல்ல துணையோடு நம் பணி நிறைவேறட்டும்.

— சித்தர்

(முற்றும்)

---

பவர்களே இல்லை என்ற நிலையே ஏற்பட்டது. ஐயாவிற்கு மிக நெருக்கமான ரெட்டி யார் உடையார், நாயக்கர், பூச்சி, [தீட்சகா] தீத்தச்சர் முதலியார் [தொழுதூர் வேலாயுதம் முதலியார்].........முதலியோர்களும் ஐயா மனம் வெறுக்கும் அளவிற்கு சமசுகிருத வேதமதத்துக்கும், பிருமணர்களுக்கும் ஆதரவான அடிமைகளாக, இருந் திட்டார்கள். எனவேதான் ஐயா, அவர்கள அருட்சோதி ஆண்டவரோடு இரண்டறக் கலந்து நிறைந்திடும் முடிவை மேற் கொண்டிட்டார்.

இன்றுவரை யாருமே வடலூர் வள்ளலாரின் சமகாலத்தவர்கள் வழங்கிய செய்திகளைத் தொகுத்து ஆய்வு செய்து வரலாறும், வாழ்வியலும் வாழ்வியல் சாதனை களும், போதனைகள் பற்றிய நூல்களை எழுத முற்படவில்லை இல்லை! இல்லை! இல்லவே இல்லை! இன்னும் சொல்லப்போனால் வள்ளல் பெருமானார் வழிபட்ட கடவுள்களையும், கடவுள்கள் பற்றிய வரலாறுகளையும் பூசாவிதிகளையும், புராண இதிகாச இலக்கியங் களையும், கலைகளையும், தோற்றுவித்த பதினெண் சித்தர்கள் பற்றியும், அவர்களின் தாய்மொழியான தமிழ்மொழி பற்றியும். அவர்கள் வழங்கிய சித்தர்நெறி என்ற இந்து மதம் பற்றியும் அவர்களின் கருவழி வாரிசுகளையும். [விந்து வழி வாரிசுகள்] குருவழிவாரிசுகளைப் பற்றிய பேருண்மைகளையும். ஆராய்ந்திடும் ஓர் அறிவார்ந்த அருள்நெறித் திருக்கூட்டமாக இராமலிங்க அடிகளாரின் பத்தர்கள் மாறுது ஏன்? ஏன்? அகல் விளக் கொளியில் அருட்பா பாராயணம் செய்தால் மட்டும் போதும் என்ற அவசர முடிவை எடுத்தது யார்? ஏன்? எப்பொழுது? எப்படி? இன்று வரை அடிகளாருக்கு இந்துமத முறைப்படி அறுகால பூசைகள் நடை பெறும் ஆலயங்கள் அமைக்கப்படாதது ஏன்? ஏன்? ஏன்? ஏற்கனவே உள்ள அனைத்து ஆலயங்களுக்கு உள்ளும், கோவில்களுக்குள்ளும். பிற வகைவழிபாட்டு நிலையங்களுக்குள்ளும். அருட் கொடை வள்ளல், அருட் பெருஞ் சோதி 'ஆண்டவர் இராமலிங்க அடிகளார்க்கு தனிக்கருவறைகள் அமைக்கப்படாதது ஏன்? இராமலிங்க அடிகளாரை இதுவரை இருந்து வரும் இந்த மதத்தின் அமைப்புகளிலிருந்து மாறுபட்டவர்.

அல்லது வேறுபட்டவர் என்று பிறர் எண்ணும் வண்ணம் அருட்பெருஞ் சோதி வழிபாட்டை மட்டும் வலியுறுத்தி மற்றவற்றை கண்டிக்கும் போக்கும், நோக்கும். அடிகளாரின் பத்தர்களுக்கு வரக்கூடாது ஏனெனில் அடிகளார் திடீரென்று ஞானோதயம் வந்ததாகவோ, தான் புதியதொரு தத்துவத்தையே தோற்றுவிப்பதாகவோ, கூறவே இல்லை. அவர் வழிபட்டது ஏற்கனவே இருந்த அனைத்து வகையான இந்துமதக் கோயில்களையும் (48 வகை) மற்ற அனைத்து வகையான அருளாளர்களையும் தான் அவர் சோதி வழிபாட்டிற்கு ஞானசபை என்று தான் பெயரிட்டார். இந்த அடிப்படையில் ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும், முயற்சிகளும். நடந்தால் தான் அவருடைய கனவு நனவாகும்.

—சித்தர் [illegible]

முற்றும்

## சோதியும் உண்மையும்................!

வடலூர் அருட்பாக் கொடைவள்ளல் இராமலிங்கஅடிகளார் 'அருட்பெருஞ் ஜோதி' என்று வடமொழி (சமசுக்கிருதம்) எழுத்தைத்தான் பயன்படுத்தினரா? இந்த அருட்பெருஞ் ஜோதி வழிபாடு இவரால்தான் கண்டுபிடிக்கப்பட்டதா? மற்ற கடவுள்களை மறுத்து இந்த 'அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்' என்ற கடவுளை எப்படி கண்டுபிடித்தார்? எப்போது கண்டுபிடித்தார்???...

இராமலிங்க அடிகளார் படிப்படியாக எல்லாக் கடவுள்களையும், கருவறை மூலவர்களையும், தெய்வம், தேவதை...... எனப்படுபவர்களையும் வழிபட்டே பத்தி சத்தி, சித்தி, முத்தி நிலைகளைப் பெற்றுர், இவர் ஞானசித்தர் எனபதால் 'சிவ வாக்கியர் எனும் ஞானசித்தர் போல உருவ வழிபாட்டையும், வழிபாட்டு நிலையப் பெருமைகளையும, திருத்சல அநலூற்று நிலைகளையும் துறந்தார், மறந்தார்...... இது ஞானசித்தர் தத்துவமாகும்.

சோதி—> ஜோதி என்று சமசுக்கிருத வெறியர்களால் எழுத்துமாற்றம் செய் யப்பட்டது இது பிருமணதாசர்களின் தொடர் போக்கே—. சோதி வழிபாடு தமிழர்க்கே உரியதாகும்.

'மறைய நின்றுளான் மாமணிச் சோதியான''
''தீப மங்கள சோதி நமோ நம''
''ஆதியு மந்தமுமிலா அரும்பெருஞ் சோதி''
''திருவையா றகலாத செம்பொற் சோதி''

.......என்று பன்னிரு திருமுறைகளில் உள்ள இவை போன்ற வாசகங்களே வினக்களுக்குரிய விடையை வழங்கிடு.

---

## இந்துமதம் - ஹிந்துமத விளக்கக் கட்டுரைத்தொடர்-4

முதலில் பிரம்மதேவன் பகவானை தியானித்து புனிதமான (4)நான்கு மனி தர்களை தன் புத்திரர்களாக தோற்றுவித்தான். சனகர், சனந்தர், சனத்சுஜாதர் சனத்குமாரர் என்ற நால்வரே முதலில் தோன்றிய பிரம்மகுமாரர்கள். தன்னுடன இருந்து படைத்தல் தொழிலுக்கு உதவுமாறு தன் குமாரர்களை வேண்டினன் பிரம்மன் ஆனல் அவர்களோ ஆத்மஞானமும், தெய்வஞானமும் மேலோங்கிய மனிதர்களாகப் பிறந்ததால் பகவானின் சேவைக்கே தங்களை அற்பணித்துக் கொண்டு தவம் செய்ய சென்று விட்டனர் என்று கூறப்படுகிறது

மெய்யான இந்துமதப்படி பிறமண் தேர்ந்தெடுத்து தயாரித்த நால்வரும் சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத்குமாரன் முதல் உகமான கிரேதாயு கத்தில் பதினெண்சித்தர் பீடத்தில் முதல் பீடாதிபதியாகியிருந்த சிவனை ஏற்றுக கொள்ளப்பட்டு, கல்லால் மரத்தின் கீழ் அமரச்செய்து, அனைத்து இந்துமதப் பேருண்மைகளையும் கற்றுக் கொடுத்து, அவர்கள் நடமாடும் நூலகமாக, எழுதாக் கிளவி இலக்கியங்களின நாயகமாக, உரிய பக்குவமடைந்தவர்களுக்கு மட்டுமே இந்து மதத்தின் அரிய பெரிய உண்மைகளைக் கூறும் பொறுப்பு நாயகமாக, உரு

வாக்கப்பட்டார்கள். இன்றைக்கும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள், இந்த நான்கு சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத்குமாரன் ஆகிய இந்துமதக் கருத்துக் கருவூலங்களோடு தொடர்புகொண்டுதான் இந்துமதப் பேருண்மைகளைத் தெரிந்து அருளாட்சி செய்யும் மரபு இருந்து வருகிறது. இதுவே மெய்யான இந்துமதத்தி லுள்ள இந்த நால்வரின் வரலாறு.

பொய்யான ஹிந்து மதப்படி, பிரம்மனின் நான்கு புத்திரர்களும், தவம் செய்யச் சென்று விட்டதால் பிரம்மதேவன் தன் புருவங்களின் அசைவினால் மற்றொரு புதல்வனை உருவாக்கினான் அவன் நீலலோகிதன் அல்லது ருத்ரன் எனப் பெயர் பெற்றான் தந்தையின் ஆணைப்படி அவன் சிருஷ்டித் தொழிலைத் தொடங்கினான். பஞ்ச பூதங்களுக்கு அதிபதியாகி பல உயிர்களை தோற்று வித்தான் ருத்ரன். ஆனால், அவன் சிருஷ்டியால் உடல் பலமும் ஆணவமும், ஆத்திரமும் ஆவேச மும் மிக்க மனிதர்களே தோன்றினர் எனவே, பிரம்மன் தன் மகனை அழைத்துத் தவம்செய்யா மல் நீசெய்யும் படைப்புக்களால் லோகத்திற்கு நஷ்டமே உண்டாகும் எனவே, தவம் செய்வாயாக என்று கூறி விடைகொடுத்து மீண்டும் தானே சிருஷ்டியை மேற்கொண்டார் இப்படி ஆபாசக் கதைகளின் மூலமும், காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளின் மூலமும், அண்டப்புளுகுகளின் மூலமும், ஆரியர்கள், தமிழர்களைத் தவறான திசைக்குத் திருப்பிவிடப் பார்க்கிறார்கள். எங்கே இன்றைய தமிழ்ப் பத்தர்களும், அருளுல ஆர்வலர்களும் ஆதரவாளர்களும்...... மேற்கூறிய சனகர் சனந்தர், சனத்சாதகர், சனத்குமாரர் ஆகிய நால்வருடன் பத்தியால் தொடர்புக் கொண்டு அருளுலகப் பேருண்மைகளைத் தெரிந்து கொண்டுவிடப் போகிறார்களோ என்ற மிக மிஞ்சிய அச்சத்தாலும், பயத்தாலும் தான் ஆரியர்களான பிருமணர்கள் இவ்விதமான கட்டுக் கதைகளைப் பரப்பி வருகிறார்கள்.

உண்மையில் இந்த மண்ணுலகில் பிறப்பவைகளுக்கு உரியப் பணிகளைச் செய்யும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுமாறு செயல்பட்டவரே பிறமண் (பிற = பிறப்பிற்குரிய, மண் = இம மண்ணுலகில்). எனவே, பிற + மண் = பிறமண் என்றால் இம்மண்ணுலகில் பிறக்கக் கூடியவைகளைப் பற்றிய பணிகளைக் கவனிப்பவர் என்றுதான் பொருள் இவரும் ஒரு சித்தரே பிறமண என்பது ஒரு பதவிதான் இந்தப் பதவியில் அடிக்கடி விண்ணுலகச் சித்தர்களும், மண்ணுலகச் சித்தர்க ளும் தேவைக்கேற்ப மாறிமாறிப் பதவி வகிப்பார்கள். இதுதான் பிறமணைப்பற்றிய உண்மையான வரலாறு இம்மண்ணுலகில் கோடிக்கணக்கான பிறமண்கள் பதவி வகித்துச் செயலாற்றியிருக்கி றார்கள் இப்பதவி போன்றது தான் சிவன், திருமால் தேவேந்திரன், இந்திரன், வருணன், இயமன் ......முதலிய அனைத்துப் பதவிகளும், அதாவது, மேற்படி பதவிகளில் அமருபவர்கள் மனிதர்க ளாக வாழ்ந்து சத்தி சித்தி, முத்தி பெற்ற பெரியோர்களும், விண்ணுலகத்தவர்களும பொறுப் பேற்பதுதான் வழக்கம் இதுவே உண்மையான இந்து மத வரலாறு இதில் கற்பனையோ, ஆபாசமோ, பொய்யோ இல்லை

## முனிவர்களும் இந்து - ஹிந்து மதக்கருத்து முரண்பாடுகளும்

இந்து மதத்திலிருந்து முனிவர்கள், இருடிகள், கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள் கந்தவர்கள் கிண்ணரர்கள், கிம்புருடர்கள்......... என்று பலர் இம்மண்ணுலகில் தோன்றிய மனிதர்களுக்குள்ளிருந்தே, தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர்களேயாவார்கள் இவர் கள் மூலமே பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், இந்த மண்ணின் ஈசர்க ளான மணீசர்கள் [மண் + ஈசர் —> மணீசர்: சித்தர்களின் நூல்களில் மணீசர் என்றுதான் குறிக்கப்படுகிறது மனிதர் என்ற சொல் ஆட்சியிலில்லை] வாழ்வில் அருட்பயிர்களைக் விளை வித்தார்கள். எனவே குறிப்பிட்ட முனிவர், இருடி....... முதலியவர்கள்தான் அருட்பயிர் விளை விக்கும் உழவர்கள் ஆவார்கள் இவர்களின் பட்டியலிலே நாரதர், பிறப்பாதி பிறப்பதிபதி [இந்த இருவரை ஆரியர்கள் தங்களின் சமசுக்கிருதமொழியில் பிரஜாபதி என்று குறிப்பிடுகிறார் கள்] வசிட்டர், அத்திரி, பத்திரி, புத்திரி, போத்திரி, முத்திரி, சித்திரி, பிறங்கி [பிருங்கி என்று சமசுக்கிருதத்தில் சொல்கிறார்கள்] 1 அருகு 2 இருகு 3 உருகு 4 எருகு 5 குருகு 6 தருகு 7புருகு [ப்ருகு என்று சமசுக்கிருதத்தில் கூறுகிறார்கள்] 8 வருகு 9 திருகு 10 முருகு என்று பத்து பேர் 'அருகாதிப் பதின்மர்' என்ற பெயரில் ஒருங்கிணைந்து செயல்படும்குழுவாகப் படைக்கப்பட்டார்கள்

—தொடரும்

## தீபாவளிக்கும் நரகாசூரனுக்கும் தொடர்பில்லை

ஓர் அசுரனை அரக்கனை, அநீதிக்காரனை......அழித்ததற்காக ஒரு திருநாள் திருவிழா, கொண்டாட்டம்........தோன்றியிருக்குமா? இருக்காது ஏனெனில், அந்தகன், இடும்பன், இராவணன் இரணியன், சலந்திரன், பகன்...... முதலியோரின் அழிவுக்குத் திருவிழாவோ! திருநாளோ! கொண்டாட்டமோ......தோற்றுவிக்கப்படவில்லை

பிறகு, ஏன் நரகாசூரன் கதைக்கும் தீபாவளிக்கும் தொடர்பு உண்டாக்கப்பட்டது? பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தில் தீபாவளித் திருநாள் 'சோதிவழிபாடு' 'தீபவழிபாடு' 'ஒளிவழிபாடு' 'சூரியவழிபாடு' சந்திரவழிபாடு 'விண்மீன் வழிபாடு' 'முத்தீஓம்பல் வழிபாடு' 'நெருப்பு வழிபாடு'..... என்று சிறப்புக்களைப் பெற்றுள்ளது இத்திருநாளில் இந்துமதக் கூட்டுவழிபாட்டால் இந்துமத ஒற்றுமையும், பற்றும், பாசமும் கட்டிக்காக்கப்பட்டன.

ஒவ்வொரு இந்துவும் தீபாவளியை முன்னிட்டு ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும், அன்னியர்களுக்கும் நீராட நல்லெண்ணை, சீயக்காய், கட்டிக்கொள்ள புதிய ஆடைகள், சரிசமமாக உட்கார்ந்துண்ண அறுசுவையுணவு, இயன்றளவு தமது ஆண்டு வருமானத்தில் சரியான கணக்குக்குரிய தொகையில் (ஆறில் ஒரு பங்கை ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும, அன்னியர்களுக்கும் நன்கொடையாக வழங்குவது) ஆறில் ஒரு பங்கு தொகை முதலியவைவற்றை வழங்க வேண்டும்-" என்று கூறுவது தான் மெய்யான இந்துமதம், நரகாசூரன் கதையைக் கூறுவது தான் பொய்யான ஹிந்துமதம். இந்த ஹிந்து மதமே பிறுமணருடையது. இந்துமதத்தைக் கெடுத்ததே இந்த ஹிந்துமதம் தான்.

---

# சித்தர் இராமாயணம்

## யக்ஞவல்லியர் எழுதிய குறிப்புகளிலிருந்து "சித்தர் காகபுசுண்டர்" தருவது

<u>இராவணன். மனைவி 'வண்டமர் குழலி':</u> இரவு வண்ண மேனியனான இராவணின் மனைவி தேவலோகத்துப் பெண்டிரெல்லாம் வெட்கி, நாணி பொறாமையுற்றுப் புழுங்கிடுமளவிற்கு கரிய நெடிய அடர்ந்த மணமிகு கூந்தலைப் பெற்றிருந்தாள் வாசனைமிக்க மலர்களில் அமர்வதைவிட வண்டுகள் அவளுடைய கூந்தலைச் சுற்றி வட்டமிடுவது அவளுடையப் பெயர் பொருத்தத்தை விளக்குகின்றது. தெய்வ மகளிர்களின் வடிவழகையும் அருட்பொலிவையும் மிஞ்சுகின்ற பேரழகு படைத்த இவள் மிகச் சிறந்தக் கற்புக்கரசியாதலால் இவளைத் தென்னிலங்கை வேந்தன் வணங்கும் ஈசனின் நெற்றிக் கண்ணுகவே நினைத்து முவுலகும் நடுங்கிற்று. இப்பேருண்மையினை இராவணன் வாயிலாகவே உணரும் நிகழ்ச்சிதான் மிகப்பெரிய இராமாயண உண்மைகளையெல்லாம் விளக்குகின்றது.

அம்புபட்டு விழ்ந்துகிடந்த இராவணின் தலையருகில் முழங்காலிட்டு உத்தரியத்தை இடுப்பில்கட்டி இடக்கை கட்டி வலக்கையால் வாய்பொத்தி குனிந்து இராவணன் வாயால் அவன் பாடிய "இராவண கீதையின்" உயிர்த் தத்துவத்தைக் கேட்டுக் கொண்டிருந்த

இராமனிடம்; இராவணன், "இராமா என் உயிர்ப் பிரிகின்ற நேரம் வந்துவிட்டது. என்பதைவிட என் மனைவி வண்டமர்குழலி பூசையைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு என்னுடைய மரணச் செய்திகேட்டு அரண்மனையிலிருந்து ஓடிவரும் அறிகுறியாக இலங்கை மாநகரின் காண்டாமணி ஒலிக்கின்றன. எனவே அவள் வருவதற்கு முன்னால் நீ ஓடி விடு.. நான் வணங்கும் ஈசனாரின் நெற்றிக்கண் போன்றவள் அவள் யாராலும் வெல்லப்பட முடியாத என்னை முறையற்ற முறையில் நீ கொலை செய்துவிட்டாய் என்பதனால் அவள் சாடமிடுவதற்கு முன் அவளின் கோபப் பார்வையினால் நீ சாம்பலாகி விடுவாய். உன்மீது அவளுக்கு உள்ள கோபம் அளவற்றது. நீயே நேரில் வந்து என் தங்கையை மானபங்கப் படுத்தியதற்கு மன்னிப்புக்கேட்டிருப்பேயேயானால்உன்மனைவியையும் உன் தம்பியையும் உன்னையும் சேர்த்து வான ஊர்தியில் ஏற்றி அயோத்தியிலேயே கொண்டு விட்டு விடும்படி எனக்கு அன்புக்கட்டளையிட்டிருப்பாள் என் காதல் மனைவி வண்டமர்குழலி நீ சூழ்ச்சியாக எந்தவிதமான போர்முறையும் தெரியாத குரங்குகளைத் துணையாக அழைத்-துக் கொண்டுவந்து முறையற்ற போர் நிகழ்த்திவிட்டாய் எனவே ஓடிவிடு, ஓடிவிடு, ஓடிவடு என்று கூறியபடி உயிர் துறந்தான் அவனின் இறுதி மூச்சு நிற்பதற்குள் இராமன் ஓடி ஒளிந்து கொண்டான்

இலக்குவன் இராவணனின் தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து அவமானப்படுத்தியச் செய்தியைக் கேட்டதுமே இராவணனை விட அவன் மனைவியான வண்டமர்குழலிதான் மிகவும் கொதிப்படைந்து "பெண்ணை அவமானப்படுத்திய பேடிகளான அந்த அயோத்தி இளவரசர்களுக்குச் சரியானப் பாடம் புகட்ட வேண்டும். உடனடியாக யாரையாவது அனுப்பி அவர்களை மன்னிப்புக் கேட்டுத் திருந்தும்படி செய்ய வேண்டும்..." என்று கூறினாள். ஆனால் இராவணன் "...நாம் தூது அனுப்புகின்ற அளவுக்கு அவர்கள் பெரியவர்கள் இல்லை. உடனே யாரையாவது அனுப்பி அவர்களைப் பிடித்து வர சொல்கிறேன்" என்றான் அதற்கு வண்டமர்குழலி "32வயது குமரி சீதை 16வயது பாலகனான இராமனை எந்நேரமும் காமக் களியாட்டத்தில் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறாள் அவளை உடனே சிறையெடுத்துக் கொண்டு வந்துவிட்டால்தான் இராமனுக்குப் பெண்ணின்பெருமையும் அருமையும் புரியும்" என்று கூறினாள். அப்படி வண்டமர்குழலி கூறியதன் பேரில் தான் இராவணன் சீதையைச் சிறையெடுத்து வந்தான்

கற்புக்கரசியான வண்டமர்குழலி சீதையிடம் பல முறை அவளுடையக் காமக்களியாட்டக் காதல் விளையாட்டுக்களுக்கு பொம்மை போல் பயன்பட்ட இராமனுக்கு உடனே அவளே செய்தியனுப்பி நேரில் வந்து இராவணனிடம் மன்னிப்புக் கேட்டு அவளை அழைத்துச் செல்லுமாறு செய்தி கூறும்படி கூறினாள் ஆனால் சீதையோ இராமனுக்குச் செய்தியனுப்ப மறுத்துவிட்டாள் ஏனென்றால் தான் வழங்கிய காமக்களியாட்ட இன்பங்களை எண்ணி பாலகனான இராமன் பித்துப்பிடித்து எப்படியும் இலங்கைக்கு வருவான். அதுதான் தனக்குச் சிறப்பு என்று பிடிவாதம் பிடித்தாள். அவளுடைய பிடிவாதத்தால் இராமனும் இலக்குவனும் இராவணனிடம் மாள நேரிடும் என்று எடுத்துக் கூறினாள் வண்டமர்குழலி. ஆனால் சீதையோ வண்டமர்குழலி மனம் புண்படும்படி "முரட்டு வீரனான இராவணனை பாலகனான இராமன் தந்திரத்தாலும தக்கச் சூழ்ச்சிகளாலும் துணைவர்களாலும் வென்றிடுவான் என்று கூறிப் பிடிவரதம் பிடித்தாள்.

இராவணனும் வண்டமர்குழலியும் எதிர்பார்த்தது போல் அயோத்தி இளவரசர்களான இராமனும் இலக்குவனும் தாங்கள் இராவணனின் தங்கையான சூர்பனகையின் மூக்கை அறுத்து அவமானப்படுத்தியதால்தான் சீதையை மாயமாக யாரோ வந்துதூக்கிச் சென்றிருக்கிறார்கள் என்று ஊகித்து உணர முடியாதவர்களாக இருந்துவிட்டார்கள். -தொடரும்

# குருதேவரின் வணக்கவுரை

இன்றைய நிலையில் உலகெங்குமுள்ள தமிழர்கள் தங்களைப் பற்றிய மறு சிந்தனையில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளார்கள். ஏனெனில், உலகெங்கும் தமிழர்கள் இழிவையும், பழியையும், சீரழிவையும், அழிவையும் அடைந்து வருகிறார்கள்.

தமிழர்கள் மதங்களின் பெயராலும், கட்சிகளின் பெயராலும், சாதிகளின் பெயராலும், வட்டாரங்களின் பெயராலும் தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து கிடக்கின்றார்கள். இக் கூட்டங்கள் ஒன்றோடொன்று வெறுப்பும் மறுப்பும் எதிர்ப்பும் பகையும் போட்டியும் பொறாமையும் சண்டைச்சச்சரவுகளும் வளர்த்துக் கொண்டே இருக்கின்றன. அதாவது, யாருக்குப் பதவி? யாருககுக்தலைமை? யாருக்குப்புகழ ?.........என்ற வெறியாட்டமே இக் கூட்டங்களு க்கிடையே நிகழ்ந்து வருகின்றன.
எனவே தான் தமிழ் மொழிப்பற்று, மொழியறிவு மொழியுணர்வு மொழி யார்வம், மொழியாற்றல் தமிழின ஒற்றுமை, தமிழினப்பற்று, தமிழின உரிமை, தமிழினப் பெருமை, தமிழர் வரலாறு, தமிழர் பண்பண்பாடு, தமிழர் இலக்கியம், தாய்நாட்டுப் பாசம்......... ..முதலியவை முளையிலேயே கருகியும், நோயுற்றும் உள்ளன. இவற்றை உடனடியாக நலப்படுத்திட, வளப்படுத்திட, வலிமைப் படுத்திட வேண்டும் சிந்தியுங்கள்.

தமிழினம், தமிழ் மொழி தமிழ் நாடு என்ற முக்கோணக் கோட்டை மீண்டும் புதிதாகக் கட்டப்பட வேண்டும். இதற்காகத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம் என்ற முக்கோண வயலை நாற்றங்காலாக்கித் தமிழரின் சமயத் தத்துவமான இந்துமத வித்துக்களை விதைத்து நாற்றுக்கள் தயாரிக்க வேண்டும் இவை, முதலில் தமிழ் நாட்டுக்குள் நடப்பட்டு விளைச்சலை அறுவடை செய்ய வேண்டும் அது கண்டு, தென்னிந்தியா, இந்தியா, ஆசியா, கீழைய நாடுகள் மேலைய நாடுகள்.. ......என்று படிப்படியாக உலகம் முழுவதும் இந்து மத வித்துக்களின் நாற்றுக்கள் நடப்பட்டு அருட்பயிர் விவசாயம் நிகழ வேண்டும். அந்த விவசாய அறுவடைப்பயனே சமத்துவம், சகோதரத்தத்துவம், உலகப் பொதுவுடமை, உலகக் கூட்டுறவு, உலகச் சமாதானம்.........முதலியவைகளாக இருககும்.

தமிழர்களின் தத்துவமே இந்துமதம். இந்த இந்து என்ற சொல் தமிழ்ச் சொல்லே. இந்து என்றால் தமிழ், தமிழ்ப்பண்பாடு தமிழ்நாகரிகம், தமிழ்வாழ்வியல் உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உலகச் சமத்துவம், உலகப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்...... என்றுதான் பொருள். ஹிந்து என்ற சொல் ஆரியரின சொல். இது குறிககும் வட ஆரிய வேதமதம் கற்பனைகள், புளுகுகள், ஆபாசங்கள், மடமைகள், ஏமாற்றுக்கள், சுரண்டல்கள், முதலாளித்துவங்கள்......... முதலிய அனைத்தும் உடையது. எனவே, ஒவ்வொரு தமிழனும் தனது மதம் இந்து மதம், இம்மதம் ஒரு சமூக விஞ்ஞானம், இம்மதம் ஒரு பகுத்தறிவு மதம், இந்தமதத்தால் தான் தமிழர்கள் மொழியுணர்வும் இன உணர்வும், நாட்டுணர்வும் பெற்று ஒற்றுமை பெற்றிடச் செய்ய முடியும்! முடியும்! முடியும்! எனவே அனைவரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேரவேண்டும் என அழைக்கின்றோம்.

# அன்புள்ள சேவுகனுக்கு ................!

## சந்திப்போம் - சிந்திப்போம்

அன்புச் சேவுக!

மதம் தான் அகவாழ்வுக்குரிய பண்பாட்டையும் புறவாழ்வுக்குரிய நாகரீகத்தையும்; சமுதாய இயக்கத்துக்குரிய அரசியல் சித்தாந்தத்தையும் உருவாக்கிக் காத்துப் போற்றிப் பேணி வளர்த்துவருகிறது. எனவேதான். 'மதமே அனைத்துக்கும் தாய்' 'மதமே பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் மூலக்கரு' 'மதமே கலையும் அறிவியலும் வளர்க்கப்பட்ட தொட்டில்'........ என்ற கருத்துக்கள் வலுவாக வளமாகச் செழித்து வருகின்றன

இப்படிப்பட்ட மதத்தையே வழியாக, வழித்துணையாக, வழிக்காட்டியாக ஏற்றுத்தான் மனிதவாழ்வில் மாற்றங்களையோ,ஏற்றங்களையோ,தோற்றங்களையோ, விளைவிக்க முடியும் எனவே யாராக இருந்தாலும் தங்களை மதவழியாகச் சிந்திக்கும் சிந்தனையாளர்களாகத் தயாரித்துக் கொண்டால் தான் பயனுள்ள சாதனைகளைச் சாதிக்க முடியும்

இந்த அரிய. கூரிய, சீரிய, சிறந்த பயன்மிக்க மதத்தின் உயிரே மொழியில்தான் இருக்கின்றது. எனவே, எந்த ஒரு மதமானாலும்: அது பிறப்பிக்கப்பட்ட அல்லது பிறப்பெடுத்த மொழியில் தான் அதனுடைய முழுமையான ஆற்றலும் விளக்கமும், பயனும் கிடைக்கும். எனவே தான் நெடுங்காலமாகக் கிறித்தவ மதம் தனது வேத நூலான ''திருபைபிளையும்'' பிற கருத்துக்-களையும். சடங்கியல்களையும், மத நடை முறைகளையும், ஒழுகலாறுகளையும். இப்ரு மொழியிலும் 'இலத்தீன்' மொழியிலுமே வைத்துக் காத்திட்டது இதே போல் இசுலாமும், தனது வேத நூலான ''திருக்குரானையும்'' மற்றபடியுள்ள மதத்தொடர்பான அனைத்துச் செய்திகளையும் அராபிய மொழியிலும் பாரசீக மொழியிலுமே பாதுகாத்திட்டது ஆனால், உலகம் முழுவதும் நாடு கடந்து மொழி கடந்து இனம் கடந்து இவை பரவியகால்; பிற மொழியாளர்களும். மதத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும்........புரிந்து கொள்ளுவதற்காக அனைத்தையும் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்த்துத் தாராளமாக வழங்கிட்டார்கள். இதனைப் பின் பற்றி இந்து மதத்தின் தலைவர்களாகத் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் பிருமணர்களும், பிருமண ஆச்சாரியார்களும், பீடாதிபதிகளும், மடாதிபதிகளும் ஏன் சமசுக்கிருத மொழியிலுள்ள மத இலக்கியங்களை மொழிபெயர்த்துத் தர முன்வரவில்லை?– வெளிநாட்டார்களில் மாக்சு முல்லர் பர்ரோ(T.Burrow). டாயின்பீ(Toynbee). கோல்(G.H. Gole)...... போன்று சிலர் சமசுக்கிருத இலக்கியங்களை உலகறியச் செய்ய மொழி பெயர்ப்புக்களைப் படைத்தார்கள். ஆனால் அவை சரியானவையல்ல! உண்மையானவையல்ல! ஆழமான பொருளை வழங்கவில்லை!...... என்றே மேற்படி பிருமணர்கள் விமர்சனங்களை வழங்கி இருட்டடிப்புச் செய்து விட்டனர். இந்தப் போக்கு ஏன்? ஏன்? ஏன்?

நண்ப! தமிழ் மொழியிலிருந்து திருடப்பட்ட அல்லது கடன் வாங்கப்பட்ட தத்துவங்களும் சித்தாந்தாங்களுமே சமசுக்கிருத மொழியில் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, வேதம் உபநிடதம் சுருதி, ஆரணம் ஆகமம்... எனப்படுபவை எல்லாமே ஏறத்தாழ ஒலி நயத்தை மட்டுமே நல்கக் கூடிய பொருளற்ற வெற்றுச் சொற்களின் கூட்டமேயாகும். எனவே, இவை மொழி பெயர்க்கப் பட்டால் கேலிக்கும் கேள்விக்கும் உரிய நிலையையே வடஆரிய வேதமதமான ஹிந்து மதம் பெற்றிடும் இவற்றால் தான் மொழிபெயர்ப்பை மறுத்தும் வெறுத்தும் எதிர்பார்த்தும் வருகின்றார்கள் பிறமண்ணினரான பிருமணர்கள்

இப்படிப்பட்ட சூழலில்தான் நாம், நமது தமிழ் மொழிப் பூசாமொழி வாசகங்களை வெளியிட்டிடல் வேண்டும் இவற்றால், தமிழ் மொழிக்கு அருளை அநுபவப் பொருளாக ஊற்றெடுக்கச் செய்யும் ஆற்றலுண்டு என்பதை மெய்ப்பிக்கலாம்.

நண்ப! நாம் பழங்காலத்தில் பயன்பட்டிட்ட இந்துமதத்தை மட்டும் மக்களுக்குச் சொல்லாமல் சாக்கிரடீசு. தாந்தே கதே, இயேசு. முகம்மது நபி கார்ல்மார்க்சு, ஏங்கல்சு, இலெனின் மாசேதுங் தொல்காப்பியர், திருமூலர், திருவள்ளுவர், யக்ஞவல்லி. வியாசர்கள், வால்மீகிகள் கம்பர்கள், பெருந்தேவனார்கள், இராமலிங்க அடிகளார், பெரியார் ஈ.வெ.ரா ...... முதலியோர் கூறியுள்ளவைகளையும் கூறியேயாக வேண்டும். அப்பொழுது தான் இன்றைய நாட்டு நடப்பில் உயிர்த்துடிப்பும், உண்மையும், உற்சாகமும், ஊக்கமும், உட் கிடக்கை மிகு உழைப்பும், சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் பிறப்பிக்கப்படுவதற்குரிய புதியதோர் தத்துவம் பிறந்திடும். மானுட நல உரிமைக்காக நமது செயல்களின் முதல் கட்டமாக தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு. என்ற முக்கோண எல்லைக்குள் நமது செயல்களை உருவாக்கிடுவோம். நாம் எதையும் எவரையும் எப்போதும் சந்திக்க, சிந்திக்கத் தயாராக இருப்போம்

அன்பு,

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

# திருவள்ளுவரின் கடவுள் கொள்கை -3

பகலவன் = கதிரவன் = சூரியன் = ஆதவன்.........என்று பதினெண் சித்தர்களின் நூல்களிலே தெளிவாக நூல்விளக்கம் கொடுக்கப்பட்டுருக்கின்றது இந்தப் பகலவன் என்ற சொல்லே இடைக்குறையால் பகவன் என்ற சொல்லாகத் திரிந்தது என்ற குறிப்பும் பதினெண் சித்தர்களின் நூல்களில் உள்ளது. பதினெண் சித்தர்களின் இந்து மதத்தத்துவம் சூரியனை ஆண் தன்மை மிக்க ஒன்று என்று குறித்து அனைத்து புராண இதிகாசங்களிலும் சூரியனை ஆணாகவே உருவகம் செய்துள்ளன. மேலும் சூரியனை வழிபடுகின்றவர்கள் (அ) சூரிய குலத்துக்குரியவர்கள் என்று கருதப்படும் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்கள் பதினெண் சித்தர்களில் பகற்காலத்தில் செயல்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள். அதாவது, இவர்கள் சந்திரனுக்குரிய இரவுக் காலத்தில் செயல்படும். கருவூரார்கள் படைத்திடும் அனைத்து வகையான கருவறைகளையும், கருவறை நிலையினர்களையும் மந்திரம், மந்திறம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்தின் மூலம் பாதுகாத்துப் பேணிடுபவர்களாகவே இருககின்றார்கள் இவர்கள் சூரியனை ஆணாகவே கருதி அனைத்து வழிபாடுகளையும் செய்கிறார்கள், எனவே தான், திருவள்ளுவர் நவநாத சித்தரின் பண்பாட்டுக் கேற்ப பெண்ணைக் குறிக்கும் ஆதி என்ற சொல்லை முதலில் சொல்லி ஆணைக் குறிக்கும் பகவன் என்ற சொல்லை இரண்டாவதாகக் கூறி தனது நூலின் ஆரம்பமான முதல் குறட்பாவில் அம்மையப்பன் வழிபாட்டை நிகழ்த்துகிறார். இப்படி -யாகத் திருவள்ளுவர் தனது திருக்குறளின் முதல் குறட்பாவிலேயே தன்னை ஒரு நவநாத சித்தர் என்று தெளிவு படுத்திக் கொள்கிறார், எனவே, திருக்குறளில் உள்ள கருத்துக்கள் நவநாத சித்தர்களின் கருத்துக்களேயாகும்

பதினெண் சித்தர்கள் படைத்த இந்து மதத்தில் உள்ள 48 வகையான சித்தர்களும் அவரவர் விருப்பப்படி 48 வகையான வாழ்வியல் தத்துவங்களை, சிததாந்தங்களை, நெறிமுறைகளை, மரபுகளை பழக்க வழக்கங்களை கொள்கைகளை, குறிக்கோள்களை.........கருத்துச் சுதந்திரத்தோடு வெளியிட்டிருப்பதைக் காண -லாம், இப்பேருண்மையினைப் புரியாதவர்கள் தான் நவநாத சித்தர் நெறி நவகோடிச் சித்தா நெறி நான்மறைச் சித்தர் நெறி, நான் முறைச் சித்தர் நெறி, நான் நெறிச் சித்தர் நெறி, நான வேதச் சித்தர் நெறி, ஞான சித்தர் நெறி எனும் 7 சித்தர் நெறிகளையும் வானில் தெரியும் வானவில்லின் ஏழு (7) வண்ணங்களுக்கு ஒப்பிட்டு இந்து மதத்தின் 7 வகை நெறிகள் என்று குறிப்பிட்டு இந்து மதத்தில் 7 அருளாறுகள் ஏழுவகைப்பாதைகள், ஏழுவகைத் தத்துவங்கள், ஏழு வகை வழி பாடுகள், ஏழுவகை சித்தாந்தங்கள், ஏழு வகைச் சித்தி முறைகள்........ என்று பலவாறு குறிப்பிடுகின்றார்கள். அதாவது, இந்து மதத்தில மண், பெண், பொன், இறைச்சி குருதிப்பலி, இறைச்சியுணவுப்படையல், மது உருவ வழிபாடு, அருவ வழிபாடு, முத்தீ ஓம்பல் ஐந்தீவேட்டல்,...... முதலிய பலவகையான வாழ்வியல் நெறிக் குழப்பங்கள் தோன்றியிருக்கின்றன. இவை அனைததும் பதினெண் சிததர்களால் உருவாக்கப்பட்ட 48 வகையான சித்தர்களின் சொந்த, விருப்பு வெறுப்புகளால் விளைந்தவையேயாகும்

இந்து மதத்தில் 48 வகையான சித்தர்களும் 48 வகையான தத்துவங்களை கூறிய போதி -லும் இவை அனைத்தும் வந்து கலக்கும் பெருங்கடல் போன்றதே பதினெண் சித்தர்களின் தத்துவமான இந்துமதமாகும், எனவே நவநாத சித்தரான திருவள்ளுவர் சங்ககால இலக்கியங்கள் கூறும் அகப்பண்பாட்டையும், புற நாகரீகத்தையும், எதிர்ப்பது போல்,.........கூறியிருக்கும் கருத்துக்கள் நவநாத சித்தர் எனப்படும் பிரிவினருக்கு (ஒரு வகைச் சித்தருக்கு)உரியவையாகும்

...தொடரும்

# வணக்கவுரை

**பிறமாச்சாரியார்**

அண்மையில் **உடுப்பியில்** இந்து சமயத் தலைவர்கள் சுமார் 800 க்கும் மேற்பட்டவர்கள் ஒன்று கூடி, மகாநாடு நடத்தியுள்ளனர். அவர்கள் மூன்று நாட்கள் கூடி. இந்தியாவை இந்து மதம் ஆளவேண்டும். ஆன்மீகத் தலைவர்கள் நேரடியாக சமுதாய வாழ்வில் ஈடுபட வேண்டும். அரசியலில் வாய்மையும் தூய்மையும் மதிப்பிழந்து விட்டன எங்கும் பசி, பஞ்சம், பட்டினி, அமைதியின்மை, சாதிக் கொடுமை, ஏற்றத் தாழ்வு,.........இன்ன பிற அனைத்தும் பெருகி வருகின்றன எனவே இதுவே ஆன்மீகத் தலைவர்கள் பொது வாழ்வில் ஈடுபட சரியான சமயம் என முடிவெடுத்துள்ளனர்.

இந்த போக்கு ஆரம்ப நிலை என்றாலும், இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை உள்ளீடின்வித்துஊன்றப்பட்டு விட்டதை முழுமையாக உணர்கின்றோம் ஆன்மீக வாதிகளால் மட்டுமே பற்றோடும் பாசத்தோடும் உண்மையோடும் உணர்வோடும் தாய் நாட்டை அழிவிலிருந்தும் இழிவிலிருந்தும் காப்பாற்ற முடியும்'' என்ற பதினெண் சித்தர்களின் தத்துவம் மீண்டும் மலருகின்றது என்று எண்ணும் போது மகிழ்ச்சியையே தருகின்றது.

அண்மையில் '**உமர் முக்தார்**' என்னும் ஆங்கிலத் திரைப்படத்தில் கூட இவ்வுண்மையை பளிச்சென விளக்கியுள்ளனர். விடுதலைத் தாகத்தை, மொழி உணர்வை, இனமானப் போராட்டத்தை, மதச் சிந்தனையை செம்மையுற விளக்கியுள்ளனர் கதாநாயகனின் தீரப் போராட்ட உணர்வு தூக்கு மேடையில் கூட கலங்காமல் நிற்க வைக்கின்ற மனப் பக்குவத்தை **மதம் மட்டுமே** தருகின்றது. இதனை பல முறை வரலாறுகள் வலியுறுத்திக் காட்டியும் கூட நம்மவர்கள் ஏனோ, ''மொழி வேண்டாம்! இனம் வேண்டாம்! பண்பாடு வேண்டாம்! எனக் கூறி மாற்றானுக்கு அடிமையாக, கூலியாக, இருப்பதையே பெருமையாகக் கருதுகின்றனர்

இத்தகையப் போக்கினால் தான், நாம் பிரிந்தும் சிதைந்தும் செயலிழந்தும் கிடக்கின்றோம் போலியான வாழ்க்கையில் ஈடுபட்டு, சோம்பலான உணர்வுகளில் மிதந்து சமுதாயக் கேடுகளை நாளுக்கு நாள் வளர்த்து வருகின்றோம்!

சொல்லிப் பார்ப்போம்! விளக்கிக் காட்டுவோம்! முடிய வில்லையென்றால் சிறு குழந்தையை கண்டித்துத் திருத்துவது போல கண்டித்து திருத்திக் காட்டுவோம் ஆனால் கடைவிரித்தோம் கொள்வாரில்லை என்றோ ''காயமே இது பொய்யடா' என்றோ ஒளிவில் ஒடுக்கத்தில் அமைதி காணப் போவதில்லை

—**சி. கவிக்குமார்**

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், **சி. கவிக்குமார் B.Sc,**
56, N G O காலனி, பொன்னேரி-601204.

**K V S பிரிண்டர்ஸ், 10. தேரடி, பொன்னேரி.**